M

# முதல் இடைப் பருவத் தேர்வு - மார்ச் 2021

பன்னிரெண்டாம் வகுப்பு பதிவு எண் | | | | | | | |

நேரம்:1.30 மணி

## பொருளியல்

மதிப்பெண்கள்:50

### பகுதி - அ

சரியான விடையை தேர்ந்தெடுக்கவும். 10×1=10

1) 'நவீன பேரியல் பொருளியலின் தந்தை' என அழைக்கப்படுபவர்

அ) ஆடம் ஸ்மித் ஆ) ஜே.எம். கீன்ஸ்

இ) ராக்னர் பிரிக்ஸ் ஈ) காரல் மார்க்ஸ்

2) முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு

அ) ரஷ்யா ஆ) அமெரிக்கா

இ) இந்தியா ஈ) சீனா

3) முதன்மை துறை என்பது

அ) தொழில் ஆ) வியாபாரம்

இ) விவசாயம் ஈ) கட்டிடம் கட்டுதல்

4) இந்தியாவில் நிதி ஆண்டு என்பது

அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 ஆ) மார்ச் 1 முதல் ஏப்ரல் 30

இ) மார்ச் 1 முதல் மார்ச் 16 ஈ) ஜனவரி 1 முதல் டிசம்பர் 31

5) மறைமுக வேலையின்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி

அ) பூஜ்யம் ஆ) ஒன்று

இ) இரண்டு ஈ) நேர்மறை

6) தொன்மைக் கோட்பாட்டின் படி, வட்டி வீதம் _____க்கான வெகுமதி

அ) முதலீடு ஆ) தேவை

இ) மூலதனம் ஈ) சேமிப்பு

7) இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் என்பது

அ) $\Delta S/\Delta Y$ ஆ) $C/Y$

இ) $\Delta C/\Delta Y$ ஈ) $\Delta Y/\Delta C$

8) MPC + MPS = (இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் + இறுதிநிலை சேமிப்பு நாட்டம் =)

அ) 1 ஆ) 2

இ) 0.1 ஈ) 1.1

9) MV = PT என்ற சமன்பாட்டில், V என்பது

அ) வாணிபத்தின் அளவு ஆ) பணத்தின் சுழற்சி வேகம்

இ) ரொக்கப் பணத்தின் அளவு ஈ) வங்கி மற்றும் கடன் பண அளவு

10) ________ பணவீக்கம் பொருளாதாரத்தினை எந்த வகையிலும் பாதிக்காது.

அ) நடக்கும் ஆ) ஓடும்

இ) தவழும் ஈ) தாவும்

## பகுதி - ஆ

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. 16 ம் வினா கட்டாய வினா. 4×2=8

11) வருமானத்தின் வட்ட ஓட்டம் - வரையறு.

12) GDP குறைப்பான் இலக்கணம் தருக.

13) 'விளைவுத் தேவை; என்றால் என்ன?

14) தொகு அளிப்பின் கூறுகள் யாவை?

15) பெருக்கி - வரையறு.

16) பணவீக்கம் என்பதன் இலக்கணம் தருக.

## பகுதி - இ

எவைய்யேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. 22 வது வினா கட்டாய வினா 4×3=12

17) பொருளாதார அமைப்புகளின் வகைகளைக் குறிப்பிடுக.

18) தேசிய வருவாய் கணக்கிடுதலில் இருமுறை கணக்கீட்டுப் பிரச்சனைக்கு என்ன தீர்வு?

19) தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக.

20) தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு வேறுபடுத்துக.

21) பணவீக்கத்தின் வகைகளைப் பற்றி எழுதுக.

22) பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

## பகுதி - ஈ

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 4×5=20

23) அ) முதலாளித்துவம், சமத்துவம் ஒப்பிடுக.

(அல்லது)

ஆ) தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.

24) அ) வேலையின்மையின் வகைகளை விவரி.

(அல்லது)

ஆ) சேயின் அங்காடி விதியினைத் திறனாய்வு செய்க.

25) அ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC), முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?

(அல்லது)

ஆ) பணத்தின் பணிகளை விளக்குக.

26) அ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரி.

(அல்லது)

ஆ) முடுக்கி இயங்கும் விதத்தினை விவரி

***************